புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# தேவந்தி – மடலமறையோன் பயணங்களில் உள்ள முரண்களும் அவற்றின் பின்னணியும்

**கட்டுரையாளர்**
**முனைவர் ஆ. சந்திரன்,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

## முன்னுரை

*சிலப்பதிகாரம் 'பல்கால் பழகினும் தெரியா உள' ஒரு பிரதி. இப்பிரதி வாசிக்கபட்ட காலச்சூழல்களின் பின்புலங்களில் தேசியக் காப்பியம், பெண்ணியக் காப்பியம்; புரட்சிக் காப்பியம்; தமிழ் பண்பாட்டை வலியுறுத்தும் காப்பியம்; வர்க்கப் போராட்டத்தைச் சொல்லும் காப்பியம்; ஆணாதிக்கச் சிந்தனையைச் சொல்லும் காப்பியம் என வாசிப்பவரின் மனநிலைக்கு ஏற்ப அர்த்தங்களைத் தரும் பன்முகத்தன்மை கொண்ட பிரதியாக உள்ளது. உரையாசிரியர்கள் தொடங்கிப் பதிப்பாசிரியர்கள், அவர்களுக்குப் பிறகான ஆராய்ச்சியாளர்கள் நவீன கோட்பாடுகளின் பின்புலத்தில் ஆராய்ந்த திறனாய்வாளர்கள் எனக் கால – சமயம் - பண்பாடு - உணர்வு – அரசியல் – மொழி - கோட்பாடுகள் எனப் பல்வேறு விதமான சிந்தனைகளின் பின்புலங்களிலும் தொடர்ந்து வாசிப்பதற்கான விசாலமான இடத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. தொடர்ந்து வாசகர்களின் வாசிப்புக்கு ஏற்ப எதிரும் புதிருமான கருத்துக்களை வெளிப்படுத்தும் பரந்த வெளியையும் (big space) அது கொடுத்துக்கொண்டிருக்கிறது. இதுவரை பல்வேறு பொருண்மைகளில் சிலப்பதிகாரப் பிரதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு இருப்பினும், இன்றும் அப்பிரதி வாசகர்களின் வாசிப்பில் இடைவெளிகளையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டுதான்*

*இருக்கிறது. அப்பபடிப்பட்ட இடைவெளிகள் மற்றும் முரண்பாடுகளில், தேவந்தி – மடலமறையோனின் பயணங்களில் உள்ள முரண்களும் அவற்றின் பின்னணி குறித்து கவனம் செலுத்தும் இக்கட்டுரை, கண்ணகி x தெய்வமுற்ற கண்ணகியின் பின்புலத்தில் வெளிப்படும் முரண்களும் அவற்றின் பின்னணி மற்றும் காப்பியத்தில் இறந்தவர்கள் x வாழ்வு பெற்றவர்களின் பின்புலமுள்ள உறவுகளும் அவற்றின் பின்னணியில் இயங்கும் அரசியல் குறித்த தெளிவை வெளிக்கொண்டுவர முயல்கிறது இக்கட்டுரை.*

**தேவந்தி – மடலமறையோனின் பயணங்களில் உள்ள முரண்களும் அவற்றின் பின்னணியும்**

*மூன்று நாடுகள், மன்னர்கள், வணிகர்கள், சமூகத்தில் நிலவிய சாதி மதம் முதலான ஏராளமான கூறுகள் நிறைந்த கதம்பமாகப் பின்னிப்பிணைந்து கிடக்கும் சிலப்பதிகாரத்தைக் கோவலன் கண்ணகி என்ற இரண்டு கதாபாத்திரங்களின் பின்னணியில் மட்டுமே பார்க்காமல் சிறு சிறு நிகழ்வுகளையும் அவற்றின் பின்புலங்களையும் அதன் நீட்சியையும் கவனத்தில் கொண்டு நோக்கவேண்டி உள்ளது. அப்படிப் பார்க்க, நாம் முதலில் கவனம் செலுத்த வேண்டியவர்கள் தேவந்தி – மாடலமறையோன். இவர்கள் பின்புலம் நடைபெறும் அரசியல்.*

*தேவந்தியும் - மாடலமறையோனும் சிலப்பதிகாரத்தில் மிக முக்கியமான செயல்பாடுகளை முன்னெடுக்கிற நபர்களாக அறியப்படுகிறார்கள். தேவந்தி கண்ணகி என்ற பாத்திரத்தின் ஊடாக தனது பயணத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துகிறாள். மாடலமறையோன் என்பவன் தன்னுடைய பயணத்தைக் கோவலனிடம் இருந்து தொடங்கி அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துகிறான். அடுத்த கட்டம் என்பது என்ன? இருவரின் பயணத்தின் நோக்கம் என்ன? என்பது குறித்து இனிச் சுருக்கமாகப் பார்க்கலாம். இங்கு விளக்கத்தின் வசதி கருதி இவ்வருவரின் பயணத்தின் பின்புலத்தில் நிகழ்ந்தவற்றை, கோவலன் மரணத்தின் முன்னர் நிகழ்ந்தவை. கோவலன் மரணத்தின் பின்னர் நிகழ்ந்தவை என இரண்டாகப் பிரித்துக் காண்பது அவசியமாகிறது.*

**கோவலன் மரணத்தின் முன்னர் நிகழ்ந்தவை**

*பாசண்ட சாத்தனின் மனைவியாகப் பார்ப்பனப் பெண்ணாகக் காப்பியத்தில் அறிமுகம் ஆகிறவள்தான் தேவந்தி. தன் கணவனான பாசண்ட சாத்தன் தன்னைக் கோயிலில் வந்து பார்க்கும்படி கூறிவிட்டுப் பிரிந்து சென்ற பிறகு அவனைத் தேடி கோயில் குளம் என்று தேடி அலைந்து கொண்டிருப்பவள். அப்படிப்பட்டவள் கண்ணகி தன்னுடைய கணவனைப் பிரிந்து இருக்கிறாள் என்ற செய்தி அறிந்தவுடன் அவளிடம் வந்து சோம குண்டம், சூரிய குண்டம் துறை மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுபவர் கணவனோடு சேர்ந்து இன்புறுவர். எனவே வா நாமும் சென்று நீராடலாம் என்று அழைக்க, 'பீடென்று' எனக் கண்ணகி மறுமொழி (சிலம்பு.9:34-64) கூறுகிறாள். இவ்வாறு தேவந்தியின் பயணம் கண்ணகியுடன் கோவலனின் மரணத்திற்கு முன்னர் நிகழ்கிறது.*

*அடுத்ததாக நாம் கவனிக்க வேண்டிய நபர் மாடலமறையோன். கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரையை நோக்கி செல்லும் கோவலனை வழியில் சந்திக்கும் மாடலமறையோன் கோவலனின் கடந்த கால வாழ்வின் வளம் நிறைந்த நினைவுகளை அவனிடம் வெளிப்படுத்தும் பின்னணியில் "எம் குல தெய்வத்தின் பெயரை இவளுக்கு இடுங்கள் என நீ கூறினாய்! மேகலை அணிந்த ஆயிரம் கனிகையர் அக்குழந்தையை*

*மணிமேகலை எனக் கூறி வாழ்த்தினார். அன்று மங்கள மடந்தையான மாதவியுடன் நீயும் செம்பொன் தானம் செய்தாய்!" (சிலம்பு.15:35-40) என்று கோவலனுக்கு அவனுடைய மகளோடு இருந்த வளமான காலத்தை நினைவூட்டிய மாடலமறையோன், அதன் பிறகு உன்னிடம் பொருள்பெறும் நோக்கத்தோடு வந்த உயர் பிறப்பாளனான அந்தணனை யானையின் துதிக்கையில் இருந்து விடுவித்த கருணை மறவன் நீ (சிலம்பு.15:42-53) தன் மகனைக் கொன்றதாகத் தவறாகக் கருதி கீறியைக் கொன்ற குற்றத்திற்காக விலக்கிச் சென்ற அந்தணனின் மனைவியை அந்தணன் வரும்வரை பெரும்செல்வம் கொடுத்து காத்ததுடன் அந்த அந்தணனை அழைத்து வந்து வேள்விகள் செய்த செல்லா செல்வன் நீ (சிலம்பு.15:54-75). பத்தினியின் மீது பொய்ச்சாட்சிக் கூறி அவளை அவனது கணவனிடம் இருந்து பிரிக்க முயன்ற குற்றத்திற்காக அறமற்ற செயல்களைச் செய்பவர்களைப் பிடித்து உண்ணும் பூதத்தின் கைகளில் சிக்கிய அறமற்றவனைக் காக்க முயன்று முடியாமல் போனதால் அக்கயவனின் தாயார் மற்றும் அவர்களது உறவினர்களுக்குப் பசிப்பிணி போக்கப் பெரும் செல்வத்தைத் தொடர்ந்து வழங்கிய இல்லோர் செம்மல் நீ இவ்வாறு நான் அறிந்தவரை நீ செய்தவை அனைத்துமே நல்ல வினையே! அரச குமரன் போன்ற கோவலனே! தீவினை பயனால்தான் கண்ணகியோடு நீ தனிமை துன்பத்தோடு வந்துள்ளாய்! (சிலம்பு.15:76-97) என்று கூறுகிறான். கோவலனின் செல்வ செழிப்பான வாழ்வினைப் பற்றி விளக்கிய அவன் பிறகு, கோவலன் தனக்கு வந்த தீக்கனாவைப் பற்றிச் சொன்னபோது அதற்கு எவ்வித மறுகருத்தும் கூறாமல், துறவரத்தில் உள்ளவர்களைத் தவிர மற்றவர்களுக்கு இங்கு இருப்பது பொருத்தமாக இருக்காது (சிலம்பு.15:41-110) என்று உடனடியாக மதுரைக்குச் செல்லுமாறு கூறிவிட்டு அங்கிருந்து சென்று விடுகிறான்.*

*இவ்வாறு மாடலமறையோனுடைய முதல் சந்திப்பில் 15 - ஆம் காதையில் மணிமேகலை பற்றிய குறிப்பு, கோவலனின் வளம் நிறைந்த செல்வச்செழிப்பான வாழ்க்கைச்சூழல் ஆகியவற்றைப் பற்றிய அறிமுகமாக ஒருபுறம் அமைந்தாலும், மறுபுறம் கோவலனின் தீய கனவு பற்றிய செய்திக்கு எவ்விதமான பதிலையும் அவன் தெரிவிக்காமல் தட்டிக் கழிப்பது என்பதும் கோவலன் வளமான வாழ்க்கை நடத்திய பொழுது உதவிப் பெற்ற அனைவரும் அந்தணர்களாக இருக்கிறார்கள் என்பதும் அதில் மாடல மறையோனும் அடங்குவான் என்பதும் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியவை.*

***கோவலன் மரணத்தின் பின்னர் நிகழ்ந்தவை***

*மாடலமறையோனின் அடுத்த வெளிப்பாடு கோவலன் இறந்து தெய்வமான கண்ணகியின் பின்புலத்தில் நிகழ்கின்றது. கண்ணகிக்குக் கோயில் சமைக்க இமயமலையிலிருந்து கல்கொண்டு வரச்சென்ற சேரன் செங்குட்டுவனை இமயமலையில் சந்திக்கும் மாடலமறையோன், "வாழ்க வெங்கோ மாதவி மடந்தை கானற் பாணி கனக விசையர் தம்... என மாதவி பற்றிக் கூறத் தொடங்குகிறான். அதனைத் தொடர்ந்து ஊழ்வினையால் கோவலன் கொல்லப்படுவது. கோவலன் குற்றமற்றவன் பாண்டிய நெடுஞ்செழியன்தான் குற்றம் உடையவன். கண்ணகியைக் காக்க தவறினேன் என்று கூறி மாதிரி தன் உயிரை மாய்த்துக் கொண்டது. கவுந்தியடிகள் உண்ணா நோன்பிருந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டது, கோவலனின் தந்தையும் கண்ணகியின் தந்தையும் தம் செல்வத்தை எல்லாம் பிறருக்குக் கொடுத்துவிட்டுத் துறவு மேற்கொண்டமை. கோவலன் கண்ணகியின் தாயார் துயரம் தாங்க முடியாமல் மரணம் அடைந்தமை. கோவலனின் காதலியான மாதவி துறவு மேற்கொண்டதோடு தன்னுடைய மகள் மணிமேகலையும் துறவு கோலம் பூணச் செய்தது*

*முதாலனவற்றைக் கூறி இறுதியாக, கோவலன் இறந்த செய்தியை என் என் சொற்களைக் கேட்டு அறிந்தோரில் இறந்தோறும் உள்ளமையால் நன்னீர் கங்கையில் நீராட வந்தேன் (சிலம்பு.27:49-110) என முடிக்கிறான். சேரன் செங்குட்டுவனின் இந்தச் சந்திப்பில் மாடலமறையோன் பெரும் செல்வத்தை அனிடம் இருந்து பரிசாக பெறுகிறான் (சிலம்பு.27:170-180) என்ற குறிப்பும் உள்ளது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. அதுவும் போர் களத்தில், பாவம் தீர்க்க புனித நீராட வந்த பின்புலத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.*

*மூன்றாவது முறையாக மாடலமறையோன் வெளிப்படுவது வஞ்சி மூதூரில். செங்குட்டுவனை இரண்டாவது முறையாகச் சந்திக்கும் அவன் செங்குட்டுவனின் பல்வேறு போர் சிறப்புகள் குறித்துப் புகந்துமுடிந்த பின்னர், வேள்வி செய்வதன் அவசியம் குறித்து நீண்ட விளக்கம் அளிக்கிறான். அதன் பின்னர் கற்புக்கரசி கண்ணகியின் கோயில் வழிபாட்டு முறை முதலியவற்றைக் கூறி அரசனின் செங்கோல் இன்றிக் கற்புடைய மகளிர் சிறப்பைப் பெறார் என்ற செய்தியைக் கண்ணகி உலகிற்கு உணர்த்தினாள் (சிலம்பு.28:112-215) என்று கண்ணகி கற்பு (கணவனுக்கு அடங்கி இருத்தல்), சேரன் செங்குட்டுவனுடைய வீரதீர சிறப்புகள், அந்தணர்கள் கொண்டு வேள்விச் செய்வதன் பயன் என்று நீள்கிறது...*

*இந்தப் பின்னணியில்தான், பீடன்று என்ற இடத்தோடு காணாமல் போகிற தேவந்தி அங்கு வருகிறாள். கோவலன் இறந்த போதோ அல்லது அதன் பிறகான கண்ணகியின் துயரத்திலோ கலந்து கொள்ளாத அவள் காவற்பெண்டு, அடித்தோழியுடன் புகாரிலிருந்து புறப்பட்டு வரும்வழியில் தாயை இழந்த ஐயையையும் உடன் அழைத்து வருகிறாள் (உரைப்பாட்டுமடை). அவ்வாறு வரும் தேவந்தி, 'முடிமன்னர் மூவரும் காத்துப் பேணிய தெய்வத்தன்மை வாய்ந்த வட பேரிமைய மலையில் பிறந்து விரைந்து செல்லும் கங்கையில் நீராடி வந்த மூங்கிலைப் போன்று வளைந்த தோளினை உடையக் கண்ணகிக்குத் தோழி நான் காண்பீராக! சோழநாட்டு பாவைக்குத் தோழி நான் காண்பீராக!' என்று கூற, அதனைத் தொடர்ந்து காவற்பெண்டு 'மாதவியைக் கண்டு கோபம் கொள்ளாத கணவனின் பேச்சிற்கு மறுபேச்சு சொல்லாத கணவன் கைபிடித்து நீரில்லாத காட்டுப் பாதையில் மதுரை நோக்கி நடந்த கண்ணகியின் செவிலித்தாய் நான்', என்று கூறுகின்றாள். அவளைத் தொடர்ந்து அடித்தோழி, 'கற்பு என்னும் கடமையைத் தன் தலையா அறமாகக் கொண்டு தன் கணவனுடன் மறுத்து எதுவும் கூறாது பின் தொடர்ந்து சென்ற கண்ணிக்குத் தோழி நான்!' என்று கூற, மீண்டும் தேவந்தி (தெய்வமாக்கப்பட்ட கண்ணகி சிலையைப் பார்த்து) பேசத் தொடங்குகிறாள். அவளது இந்த உரையாடலில்,*

1. *கனவு பற்றி நீ கூறிய போது செய்ய வேண்டியதை நான் உணராமல் இருந்துவிட்டேன்.*
2. *நீ உயிர் நீத்ததைக் கேட்டு உன் மாமி உயிர் நீத்தார்*
3. *மாசாத்துவனும் மாநாய்கனும் துறவு பூண்டனர் (கோவலன் இறப்பு மற்றும் பாண்டியன் மரணம் அறிந்து)*
4. *மாதவி துறவு பூண்டதுடன் தன்னுடைய மகளையும் துறவு பூணச் செய்தாள் (ஊரர் அலர் காரணமாக)*
5. *மெய்ப்பொருள் அறிந்த கவுந்தியடிகள் அடைக்கலம் தந்த உன்னைக் காக்கத் தவறியதை எண்ணி வருந்தி மாதரி உயிர் நீத்தாள்.*
6. *அவள் மகள் இன்னும் திருமணமாகாமல் உள்ளாள்.*

*என்ற விவரங்கள் தேவந்தி வாயிலாக வெளிப்படுகின்றன.*

*இந்தப் பின்புலத்தில்தான் கண்ணகி வனில் தோன்றுகிறாள். அவ்வாறு தோன்றிய அவள் ‘தென்னவன் தீதிலன். தேவர்களின் விருந்தினனாக உள்ளான். அவனுக்கு நான் மகளாவேன் முருகனுடைய குன்றில் வந்து குரவையாடுவேன் என்கிறாள்.... தெய்வமாக வானில் தோன்றிச் சேரனுக்குக் காட்சியளிக்கும் கண்ணகி குரவையாட அழைக்க அவளது தோழியர் (சோழ பாண்டிய சேர) மூவேந்தர்களின் சிறப்புகளை வரிப் படல்களில் (அம்மானைவரி, கந்துகவரி, ஊசல்வரி) பாடுகின்றாள். இறுதியாக சேரனைக் கண்ணகியோடு சேர்ந்துதோழியரும் வாழுத்துகின்றனர். (சிலம்பு.29;10-25) அதன் பின்னர் தேவந்தி, இளம்வயதில் துறவு பூண்ட மணிமேகலைக்காக வருந்துகிறாள் (சிலம்பு.30;30-40). அவ்வாறு வருந்திக்கொண்டிருக்கும்போது அவளுக்கு தெய்வம் (பாசண்ட சாத்தன்) வருகிறது. தெய்வம் வந்த அவள், அரட்டனச் செட்டியின் இரு மகள்கள் மற்றும் திருவனந்தபுரத்தில் அனந்த பத்தமாநாபன் கோயிலில் ஊழியம் செய்யும் சேடக்குடுமியின் சிறிய மகள் ஆகியோரை சேரன் செங்குட்டுவனுக்குச் சுட்டிக் காட்டி, கண்ணகியின் கோயில் அருகில் உள்ள பாறையில் உள்ள சுனைகளில் இருந்து கொண்டவந்த நீரை அவர்களின் மேல் தெளித்தால் தம் பழம்பிறவி குறித்து அவர்கள் அறிவார்கள் என்று சொல்கிறாள்... இறந்த கண்ணகியின் தாய், கோவலனின் தாய் மற்றும் மாதிரி ஆகியோர் வெளிப்படுகின்றனர் (சிலம்பு.30;100-115). அவ்வாறு வெளிப்பட்ட அவர்கள் அழுது அரற்றுகின்றனர். அதைப் பார்த்த சேரன் செங்குட்டுவன் ஒன்றும் புரியாமல் மாடலனைப் பார்க்க, (மன்னனின் குறிப்பை அறிந்தவனாக கோவலனின் புண்ணியம்...) மதம் கொண்ட யானையின் துதிக்கையில் புகுந்து அந்தணனின் உயிரைக்காத்த நல் வினையால் கோவலன் வானோர் வடிவம் பெற்றான். வானவர் வடிவம் பெற்ற கோவலன் மேல் அன்பும், அவனது மனைவி மேல் அன்பும் கொண்டவர்களாக இருந்தாலும், வாணுலத்தில் வாழும் தேவர்களுடன் செல்லும் படியான குறைவில்லாத கெடுதலற்ற நல்ல தவமும் அறனும் செய்யாது இருந்ததினால் இந்த மூன்று பெண்களும் வானோர் உலகம் செல்ல முடியவில்லை... (சிலம்பு 30;120-130) என்றும், கண்ணகியின் தாயும் மாமியும் கண்ணகிமேல் கொண்ட அன்பால் அவள் அன்புள்ளம் கொண்ட அரட்டனச் செட்டியின் மகள்களாகவும், மாதரி முற்பிறப்பில் கண்ணகி மேல் கொண்ட அன்பாலும் குரவை ஆடியதன் பயனாலும் சேடக்குடுமியின் சிறிய மகளாகவும் பிறந்தாள்’ என்றும் விளக்கம் அளிக்கிறான்.*

*அதனைத் தொடர்ந்து, கண்ணகிக் கோயிலுக்கு இறையிலியாக நிலம் வழங்கி தேவந்தியை அர்ச்சனை செய்ய சேரன் செங்குட்டுவன் அணையிடுகிறான். பின்னர் மாடலன் சொல்கேட்டுச் சிறைபிடிக்கப்பட்ட ஆரிய மன்னர்களையும் ஏற்கனவே சிறையில் இருந்த மன்னர்களையும் விடுதலை செய்கின்றான். அதன் பின்னர், சேரன் செங்குட்டுவன், மாடலமறையோன், இலங்கை மன்னன் கயவாகு உள்ளிட்டோர் வேள்விச்சாலை நோக்கிச் செல்கின்றனர்.*

*அந்த கூட்டத்தில் தானும் இருந்ததாகக் கூறும் இளங்கோவடிகள், தன்னைப் பார்த்து "வஞ்சி மூதூரில் அரண்மனை அத்தாணி மணி மண்டபத்தில் நின் தந்தையாகிய சேரலாதனின் அருகில் இருந்தாய். நின்னிடம் அரசு வீற்றிருக்கும் சிறப்பு இலக்கணம் உள்ளது என நிமித்திகன் ஒருவன் உன்னைப் பார்த்துக் கூறினான். அவ்வாறு கூறியவனை நீ சினந்து பார்த்தாய். தேன் சிந்தி நறுமணம் கமழும் மாலையையும், கொடி பறக்கும் தேர்ப்படையையும் உடைய நின் தமையனாகிய செங்குட்டுவனின் துன்பம் நீங்குமாறு*

*குணவாயிற் கோட்டத்தில் கடவுளர் எழுந்தருளியுள்ள சிலைகள் முன்னிலையில் அரசாட்சியாக சுமை விலகிச் செல்லும்படி துறவு பூண்டாய்" (சிலம்பு.30:170-180) என்று தேவந்தி மேல் தெய்வமாகத் தோன்றிய கண்ணகிக் கூறியதாகக் குறிப்பிடுகிறார். தேவந்தி மேல் கண்ணகி வந்து பேசுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது கவனத்தில் கொள்ளத்தக்கது.*

*அதனைத் தொடர்ந்து சமண சமயத்தின் கருத்துக்கள் சிலவற்றைத் தொடர்ந்து முன்வைக்கிறார் (சிலம்பு.30: 185 -;87 ) அவற்றில்,*

1. *இச்சிலப்பதிகாரத்தைத் தெளிவுடன் கேட்டுக் கொண்டிருந்த உலகத்தோரே. எப்பொருளையும் நாம் இழந்து விட்டோம் என்று வருத்தத்தையும் நமக்கு எப்படிப்பட்ட துன்பங்கள் வந்தாலும் அவைகளை மென்மையாக தக்க முறையில் நீக்குங்கள்.*
2. *உண்மையான தெய்வங்களை வணங்குங்கள்.*
3. *உண்மையான தெய்வத்தை உணர்ந்தவர்களைப் போற்றுங்கள்.*

*என்பன முக்கியமானவைகளாக படுகின்றன. இவற்றுடன், சிலப்பதிகாரத்தை எழுதுமாறு இளங்கோவடிகளைச் சீத்தலை சாத்தனார் கேட்டுக் கொண்டார் எனபதையும் இணைத்துப் பார்க்க வேண்டும்.*

*மேலும், இமயவர்மன் நெடுஞ்சேரலாதனின் இரண்டாம் மனைவியான வேண்மாவிற்குப் பிறந்த களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் (பதிற்றுப்பத்து - 4) மற்றும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். (பதிற்றுப்பத்து - 6) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மூத்த மனைவியான சோழன் மணக்கிள்ளியின் மகன்களான கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் (பதிற்றுப்பத்து - 5) அவனது தம்பி இளங்கோவடிகள் என்ற இந்தப் பட்டியலில் வயதில் மூத்தவர்கள் என்ற வரிசைமுறையில் அடுத்தடுத்து (இமயவரம்பனின் இரண்டு மனைவியரின் 4 மகன்களில் மூவர்) மன்னர்களாக மணிமகுடம் சூட்டியுள்ளனர் என்று அறிய முடிகின்றது. (தாய்நில வரலாறு பக்.59-66). இளங்கோவடிகள் துறவு மேற்கொண்டார் என்ற செய்தியை நாம் சிலப்பதிகாரத்தின் வழி அறிகிறோம். இளங்கோவின் துறவிற்கு நிமிர்த்திகன் கொடுத்த செய்தி தான் காரணம் என அறிகிறோம். அதுவும் தெய்வமேறிய (கண்ணகி) தேவந்தியின் கூற்றாகக் காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ள பின்புலம் இளங்கோவடிகளின் துறவிற்கான காரணம் குறித்த செய்தியின் பின்புலத்தில் ஏதோ ஒன்று மறைந்துள்ளது என்கிற ஐயத்தை உண்டாக்குகிறது. அது விவாதத்திற்குரிய ஒன்று. என்றாலும் இப்படி ஒரு ஐயம் ஏற்படுவதை மறுப்பதற்கு இல்லை என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. இப்படி குறுக்கும் நெடுக்குமாக உள்ள செய்திகளின் பின்புலத்தில் நாம் சிலப்பதிகாரத்தை அணுக வேண்டி உள்ளது.*

*மேற்கண்ட விவரங்களை எல்லாம் ஒன்றுடன் ஒன்றைப் பொறுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. இந்தப் பொறுத்தங்கள் வழி பார்க்க, காப்பியத்தில் இடம்பெற்றுள்ள தேவந்தி – மாடலமறையோனின் பயண பின்புலத்தில் வெளிப்படும் செய்திகளில் இருந்து பின்வரும் முரண்பாடுகளை அறியமுடிகின்றன.*

1. *கண்ணகியைச் சந்தித்த போது 'என்னுடைய கோவிலுக்கு வா' என்று பிரிந்து சென்ற பாசண்ட சாத்தனைப் பார்க்கச் செல்தை விடுத்து கோயில் குளம் என்று போகும் தேவந்தி x தெய்வமான கண்ணகியின் கோயிலில் பிரிந்து சென்ற*

கணவனே அவளைத்தேடி வருகிறான். அதுவும் வேட்டுவர் மரபான தெய்வம் ஏறுதாலாக அது அமைகிறது.

2. கணவனைத் தேடி செல்வது பெருமை அன்று என்றவள், கணவன் கைப்பிடித்து புகாரை விட்டு மதுரைக்குச் சென்றவள் (கணவனுக்கு அடங்கிக் கிடந்து), கணவன் அந்தணர்களுக்குச் செய்த புண்ணியங்களால் அவனால் வானுலகம் அடைந்தவள் x தெய்வமான (இறந்த) பிறகு கணவனைவிட்டு தனியாக வந்து அனைவருக்கும் காட்சியளிக்கிறாள்.

3. கோவலன் அந்தணர்களுக்குச் செய்த நன்மையின் பயனாகத்தான் வானுலகை அடைந்தான் x நல்லவர்களாக இருந்தாலும் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாத காரணத்தால் கண்ணகியின் தாயும் மாமியும் மாதிரியும் மீண்டும் பூமியில் பிறக்கின்றனர்.

4. கோவலன் மரணச் செய்தி அறிந்த அவனது தாயும் மாமியும் அடைகலம் பெற்ற மாதரியும் மதுரைக்கு வழிகாட்டிய கவுந்தியடிகளும் மாடலன் வழி அறிந்தவர்களில் சிலரும் இறந்தனர். கோவனின் தந்தையும் கண்ணகியின் தந்தையும் மற்றும் மாதவி தன்மகளுடனும் உலக வழ்வைத் துறந்து துறவை மேற்கொள்கின்றனர் x கோவலனால் நன்மை அடைந்தவர்களில் யாருக்கும் எவ்வித வருத்தமும் தீங்கும் நேர்ந்ததாக குறிப்பு இல்லை. மாடலன் கோவலன் மரணத்தால் தனக்கு எவ்வித கேடும் வந்துவிடக் கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் கங்கையில் நீராட செல்கின்றான். பாவம் தொலைக்கச் சென்ற இடத்திலும் செங்குட்டுவனிடமிருந்து பெரும் செல்வத்தைப் பரிசாகப் பெறுகிறான் என்பதை இணைத்து வாசிக்கவும்.

5. பாண்டியன் கோவலனைப் போல் (அந்தணர்களுக்கு உதவி இருப்பான்...) தேவர் உலகை அடைந்தான் (கொலை செய்தாலும்) x கவுந்தியடிகள் மரணமடைகிறாள் (பெண்ணாக இருப்பதால்) தூய மனம் கொண்ட சமண சமயத்துறவியாக இருந்தாலும்.


6. கோவலன் இறந்த போது மாதரி கோவலனை நல்லவன் பாண்டியன்தான் தீங்கிழைத்தான் என்று கூறுவதும், கண்ணகி தன் கணவனைக் கொன்ற மதுரை மாநகரை தீக்கிரையாக்குவதும் x தெய்வமான கண்ணகி தென்னவன் பாண்டியன் குற்றமற்றவன். தேவர் உலகில் உள்ளான் நான் அவள் மகளாவேன் என்றும் கூறுவதும், குரவையாட அனைவரையும் அழைப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டி உள்ளது.

7. தெய்வமாக வானில் தோன்றிச் சேரனுக்குக் காட்சியளிக்கும் கண்ணகி குரவையாடுதல் மூலம் மூவேந்தர் புகழ்பாடுதல் x தேவந்தி மேல் வந்த கண்ணகி இளங்கோவின் வரலாறு சொல்லுதல் என்பதும், அதுவும் வேள்வி பின்புலத்திலும், பாசண்டச் சாத்தன் தெய்வமாக வந்து போன பின்னர் நிகழ்வதும் கவனிக்கத்தக்கது.

8. ஒரு புறம் பெண்கள் மேல் தெய்வம் வருகின்றது *x* இன்னொரு புறம் வானில் இருந்து மண்ணிற்குக் கண்ணகி வருகிறாள். வானிலிருந்து வரும் அவள் *x* குரவை அட அனைவரையும் அழைக்கிறாள். அதாவது விண் *x* மண் இணைவு இங்கு நடக்கிறது.

இத்தகைய இணைவின் சூட்சுமதாரிகளாக தேவந்தி – மாடல மறையோன் செயல்படுகின்றனர். கண்ணகி பின்புத்தில் இருந்து புறப்படும் தேவந்தி வைதீக பெருமரபினை நாட்டார் மரபில் கலக்கும் வேலையில் ஈடுபட *x* கோவலன் பின்புத்தில் இருந்து புறப்படும் மாடலன் வைதீக பெருமரபினை நிலைபெறச் செய்வதுடன் ஆரியர்களை சாதூர்யமாகச் சிறையிலிருந்து விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளை கச்சிதமாகச் செய்கிறான். மரியம்மன், வேடியப்பன் முதலான நாட்டார் கோயில்களில் குடமுழுக்குகள், வேள்விகள் இன்று பாரப்பனர்களின் முன்னிலையில் நடைபெறுவதை அதன் தெடர்ச்சியாக இணைத்துப் பார்க்கலாம்.

**இந்த உண்மைகள் பின்வரும் வரைபடத்தில் உள்ளவாறு அமைந்துள்ளதை அறியலாம்.**




**முடிவுரை**

தேவந்தியும் மாடலமறையோனும் சிலப்பதிகாரத்தில் மிக முக்கியமான செயல்பாடுகளை முன்னெடுக்கிற நபர்களாக அறியப்படுகிறார்கள். அதாவது, தேவந்தி கண்ணகி என்ற பாத்திரத்தின் ஊடாக தனது பயணத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துகிறாள். மாடலமறையோன் என்பவன் தன்னுடைய பயணத்தை கோவலனிடம் இருந்து தொடங்கி அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துகிறான். அடுத்த கட்டம் என்பது இங்கு நாட்டார் மரபை வைதீக பெரு மரபு தன்னுள் கிரகித்துக் கொள்வது. அத்துடன், அதிகாரத்தில் உள்ளவர்களை ஆரியர்களுக்கு சார்பான முடிவினை எடுக்க வைப்பது எனபதாக விரிவடைகின்றது. இத்தகைய நிலை இன்றும் தொடர்ந்து நடைபெறுவதை நாம் கண்கூடகப் பார்க்கிறோம்.

**துணைநின்ற நூல்கள்**


1. இளவழுதி.வீ., சிலப்பதிகாரம் (மூலமுமு உரையும்), 2015 (முதல் பதிப்பு), தி.நகர், சென்னை -600 017.
2. இறைக்குருவனார், திருக்குறள் மணி புலவர்., சிலம்பில் பிழையா (ம. பொ. சி. க்கு மறுப்பு), 1983 (மறுபதிப்பு- 1) தமிழ் கொடி பதிப்பகம் , 88 தம்பு செட்டி தெரு , சென்னை - 600 001.
3. சந்திரன், முனைவர் ஆ. சிலப்பதிகார வாசிப்பில் உள்ள முரண்பாடுகளும் இடைவெளிகளும் (ஆய்வுக்கட்டுரை), ஜூலை – 2021, சான்லாக்ஸ் பன்னாட்டு அய்விதழ், தொகுதி – 6, வெளியீடு -1, http://www.shanlaxjournals.in/journals/index.php/tamil/article/view/4035
4. சிதம்பரனார், சாமி., சிலப்பதிகாரத் தமிழகம், 2008 (முதல் பதிப்பு), அறிவுப் பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை – 600 014.
5. சுப்பிரமணியன், முனைவர் ச.வே., கானல் வரி, 2002 (முதல் பதிப்பு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 600 113.
6. தங்கவேலு, முனைவர் கோ, தமிழக வரலாற்று வரிசை -9, தாய்நில வரலாறு (முதல் பாகம்), 2013 (முதல் பதிப்பு), அமிழ்தம் பதிப்பு, தி.நகர், சென்னை – 600 017.
7. திருகூட சுந்தரம், பொ., சிலப்பதிகாரம் (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்), 1967 (முதல் பதிப்பு), அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் நூல் வெளியீடு.
8. நடராசன், தி.சு., சிலப்பதிகாரம் மறுவாசிப்பு, 2015 (முதல் பதிப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை - 600 098.
9. பஞ்சாங்கம், க., இலக்கியத் திறனாய்வு (பஞ்சாங்கம் கட்டுரைகள் II), 2010 (முதல் பதிப்பு), காவ்யா வெளியீடு, கோடம்பாக்கம், சென்னை – 600 024.
10. மாணிக்கம்.ஏ (உ.ஆ)., சிலப்பதிகாரம் தெளிவுரை, 2019 (பத்தாம் பதிப்பு), உமா பதிப்பகம், சென்னை – 600 001.
11. மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் தெ.பொ.மீ களஞ்சியம் - 4, 2005 (முதல் பதிப்பு), காவ்யா வெளியீடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.